1990 மார்ச் 31]

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 219-ன் கீழ் உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை கொண்டு வருகின்றேன். திருநெல்வேலி பதிப்பு தினமலர் பத்திரிகையில் 21-3-1990ஆம் நாள் செய்தித் தாளின் முதல் பக்கத்தில் 3ஆம் பத்தியில் சட்டசபையில் ரகளை, அமளி என்ற தலைப்பிட்டு சட்டப் பேரவை நிகழ்ச்சி குறித்து செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதில் காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் கீழ்க்கண்டவாறு பேசியதாக செய்தி வந்துள்ளது. செய்தியாவது—

10-10 மணி.

''பாண்டியனும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் பேசிய நா கூசும் சொற்களை இந்தச் சபை இதற்கு முன் கேட்டதே இல்லை'' என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குமரி அனந்தன் அவர்கள் பேசியதாக அந்தச் செய்தி.

ஆனால் உண்மையில் அவ்வாறு நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. குமரி அனந்தனும் தனது பேச்சில் ''தி.மு.க. உறுப்பினர்களும்'' என்று பேசியதும் இல்லை. ஆக பேசாத ஒன்றை தி.மு. கழக உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிக்கும் வகையில் வேண்டும் என்றே திருநெல்வேலி பதிப்பு தினமலர் செய்தியாய் வெளியிட்டுள்ளது. அதனை திருநெல்வேலியில் படித்த பல்வேறு வாசகர்கள் நண்பர்கள் எனக்கு கடிதம் மூலமாக சட்ட மன்றத்திலே இப்படி ஒரு இழி நிலை ஏற்படுகிறதா என்று கேட்கக் கூடிய அளவுக்கு இந்தச் செய்தி அங்கே வலுப்பெற்றிருக்கிறது. ஆகவே இந்தச் செய்தி உண்மைக்கு புறம்பானது. புறம்பானது மட்டுமல்ல, சட்டப் பேரவையினுடைய 219-வது விதியின் கீழ் இது அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்பதும், ஆகவே பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுடைய கண்ணியத்தைக் காப்பாற்ற இப் பிரச்சினையை நீங்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுத்திட அன்புடன் வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து ''தினமலர்'' நாளிதழ் ஆசிரியரிடம் விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

4. அறிவிப்பு.

இந்திய ஐக்கியப் பொதுவுடைமைக் கட்சி சட்டமன்றப் பேரவையில் ஓர் அணியாகச் செயல்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தர்மபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதியில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட திரு. ந. நஞ்சப்பன் அவர்களைச்